திரு. கே. எ. வகாப் : இந்த நவ்லாக் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்காக பல ஆண்டுகளாக முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்த நிலத்தை எடுப்பதற்கு சில தனிப்பட்டவர்கள் செய்கிற தகராறின் காரணமாக அது தாமதப்படுகிறது. ஆகவே, அரசு அதற்காக உடனடியாகத் தீவிர முயற்சி எடுத்து ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்த நவ்லாக் பண்ணை 1960-ம் ஆண்டிலிருந்து 76.39 ஏக்கர் பரப்பளவில் ஒரு பண்ணையாக இயங்கி வருகிறது. பண்ணையை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் லார்ட் மோகன் கிருஷ்ணதாஸுக்கும் மற்றும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் சொந்தமான 524.16 ஏக்கர் நிலம் அதிகப்படியாக தமிழ்நாடு 1956-ம் ஆண்டு இயங்கா உடமைகளைக் கேட்டுப் பெறுதல், கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் கேட்டுப்பெறுமாறு வேளாண்மை இயக்குநர் ஒரு திட்டம் தயார் செய்தார். கேட்டுப் பெறும் ஆணையை எதிர்த்து நில உடமையாளர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தனர். மேற்படி வழக்கை விசாரித்து நீதி மன்றம் சட்டத்தின்கீழ் கேட்டுப்பெறுவதற்குச் சரியான முறையில் நில உடைமையாளர்களுக்கு நோட்டீஸ் பிறப்பிக்கவில்லை என்ற காரணத்திற்காக கேட்டுப் பெறுதல் முறை செல்லாது என்று தீர்ப்புக் கூறியது. ஆகவே, நிலம் கேட்டுப்பெறுதல் குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்தது. இப்போது அரசு தீவிரமான திட்டம் தயாரித்து உடனடியாக எடுத்துக் கொள்வதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது. அதற்கு வேண்டிய ரெவின்யூ அதிகாரிகளும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் கையகப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

எல்லாபுரம் ஒன்றியத்திற்கு துணை விவசாயக் கிடங்கு

* 160 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விவசாயக் கிடங்குக்கு இடவசதி போதாமையால், துணைக்கிடங்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம். செங்கை மாவட்ட ஆட்சியாளர் 1972–73-ம் ஆண்டில் வவும்கப்பட்ட விவசாய மானியத்தின்கீழ் எல்லாபுரத்தில் துணை விவசாய கிடங்கு கட்டுவதற்கான செயற்குறிப்பை செங்கை மாவட்ட வேளாண்மை அதிகாரி இடம் கேட்டுள்ளார். இத்துணைக்கிடங்கு கட்டுவதற்காக ரூ. 12,208 ஒதுக்கப்பட்டுள்ளது. செயற்குறிப்பு கிடைக்கப்பெற்றதும் துணை கிடங்கு கட்டுவதற்கான நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்போது ஒதுக்கப்பட்டு இருக்கிற 12,208 ரூபாய் முதல் கட்டமாக வேலைகள் எடுத்துக் கொள்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, அடுத்த ஆண்டுக்குள் அந்த வேலையை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உடனடியாகக் கட்ட வேண்டுமென்பதற்காகத்தான் கோட்ட ஆட்சியாளரிடம் ரூ. 12,208 ஒப்படைக்கப்பட்டுள்ளது. 31—1—1973-க்குள் அந்த வேலையை முடிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முடிவடையும் என்று நம்புகிறேன்.

Tractor service by Agro-Industries Corporation

* 205. Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the tractor service provided at present by the Agro-Industries Corporation in this State?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவையின் முன் அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது போன்ற கழகங்களை எல்லாம் மாவட்டங்களிலும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்துவதற்கு இப்போது திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதை விஸ்தரிக்கவும் நடவடிக்கைகள் விரிவாக எடுக்கப்படும்.

@ 418–426-ம் பக்கங்களில் இணைப்பு—4 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.